# தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு தடையாக இருந்துவருவது தமிழர்களே தமிழர்களே தமிழர்களே

பாகம் - 02

சட்ட ஆட்சியும் ஜனநாயகமும் ஒழுங்காக சீராகவிருந்தபோது இடம்பெற்ற நிகழ்வுகளில் தமிழர்களின் தலைவர்கள் நடந்துகொண்ட சமயோசிதமற்ற நடவடிக்கைகளினால் கிடைக்கப்பெற்ற இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான வாய்ப்புகளை கைநழுவவிட்டது பற்றி ஆராய்ந்திருந்தோம்.

இந்த கட்டுரையில் சட்டவாட்சி ஜனநாயகம் ஆகியவை கேள்விக்குறியாக சீரழிந்திருந்த யுத்தகாலத்தில் தமிழ்த்தரப்பினர் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக கிடைக்கப்பெற்ற அரிய சந்தர்ப்பங்களை கைநழுவவிட்டிருந்தது பற்றி ஆராயப்படுகிறது.

## ஈழத் தீர்மானம்

அகிம்சை முறையிலான தமிழர்களின் போராட்டம் 1972ம் ஆண்டைய குடியரசு அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதோடு வலுவிழந்து விட்டது. தமிழரசுக்கட்சி அடுத்தகட்ட நடவடிக்கைபற்றி சிந்திக்கமுடியாதிருந்த காரணத்தினால் தமிழ்காங்கிரஸ்கட்சி மலையகத்தின் தொண்டமானின் காங்கிரஸ்கட்சி மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் கே.டபில்யூ.தேவநாயகம் உட்பட பலரை இணைத்து தமிழர் விடுதலை கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கி இருந்தார்கள். இந்த தமிழர் விடுதலை கூட்டணியை உருவாக்கிவிட்டபின் 1976ம் ஆண்டு வட்டுக்கோட்டை மகாநாடு நடைபெற்றது. இந்த மகாநாட்டில் தமிழ் மக்களின் தலைவிதியை மாற்றி அமைத்ததிற்கு அடிப்படையாக அமைந்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருந்தார்கள். அத்தீர்மானம் வட்டுக்கோட்டை தீர்மானம் என்று இன்றுவரை அழைக்கப்படுகிறது.

ஆயுத கலாசாரம் தமிழர்களிடையே ஆரம்பித்ததற்கு வட்டுக்கோட்டை தீர்மானம் முக்கியம் வாய்ந்ததாக இருந்துள்ளது என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று. வட்டுக்கோட்டை தீர்மானம் தழிழரசுக்கட்சியின் சமஸ்டி கோட்பாட்டிலிருந்து விலகி தனிஈழம் உருவாகுவதற்கு வித்திட்டதொன்றாகவிருந்தது. எந்தப் புவியியல் சார்ந்த எல்லைகளும் தமிழ் சிங்கள பிரதேசங்களை கோடிட்டு பிரிக்ககூடியதாக இல்லாத நிலைமையில் ஈழத்தீர்மானம் என்ன அடிப்படையில் முன்வைக்கப்பட்டதென்பது அன்று இந்த தீர்மானத்தை நிறைவேற்றிய தமிழர் விடுதலை கூட்டணிக்கே வெளிச்சம். மன்னார் சிலாபத்துறை பிரதேசசெயலாளர் பிரிவிலிருந்து பொத்துவில் பாணுமைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவுவரை நேரற்றதும் நீண்டதும் தூரமானதுமான பல

கிராமங்களை ஊடறுத்துச் செல்லக்கூடிய தமிழ் சிங்கள கிராமங்களுக்கிடையிலான எல்லைகளை கொண்ட ஒரு தனி நாடு உருவாகினாலும் அதன் எல்லைகளில் வாழும் தமிழ் கிராம மக்களை பாதுகாப்பதற்கு படையணி அமைத்து செயற்படுத்தமுடியாது என்பது எவருக்கும் விளக்கம். ஈழம் அமைந்தாலும் சிங்களதேசம் அதை அங்கீகரிக்குமா? என்பதற்கு எதுவித சாதகமான பதிலும் கிடக்கப்போவதில்லை. அதை அரசு சும்மா வேடிக்கை பார்ததுக் கொண்டிருக்குமா? பெரும்பான்மை சிங்களமக்களை கொண்ட மத்தியஅரசு கைவிடப்பட்ட பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்கே முனையும். எல்லைகளில் வாழும் தமிழ்க் கிராமவாசிகள் நிம்மதியற்ற வாழ்க்கையை கொண்டிருப்பார்கள். தொடர்ச்சியாக மோதல்களும் செல்வீச்சுக்களும் மரணஓலங்களும்தான் தமிழ்ஈழத் தீர்மானத்தின் விளைவாக காணப்படும். தமிழர் பிரதேசங்கள் ஒரு பாலஸ்தீனமாக மாறிவிடும்.

இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தை இயற்றியபோது அவர்கள் அதை செயலுருவில் நடைமுறைப்படுத்த என்ன திட்டங்களை நினைத்திருந்தார்கள் என்று எவருக்குமே அப்போது தெரிந்திருக்கவில்லை. இந்த வட்டுக்கோட்டை தீர்மானம் தங்களது வாக்கு வங்கியை தக்க வைக்கவும் தமிழ் மக்களை திசை திருப்ப செய்யும் ஒரு அரசியலுக்கான முயற்சியாகவும் அது அன்றைய தமிழ்த்தலைவர்களின் கையாலாகாத ஒரு செயற்பாட்டின் தன்மையை மட்டும் வெளிக்காட்டியதாகவே கருதவேண்டியுள்ளது.

**ஆயுதப் போராட்டம்**

1980களில் வெடித்த ஈழத்தமிழர் ஆயுதப் போராட்டம் வட்டுக்கோட்டை தீர்மானத்தை தங்களது ஆயுதபோராட்டத்துக்கு உந்து சக்தியாக இயக்கங்கள் கையிலெடுத்தன. விடுதலைப்புலிகளின் அமைப்பு தங்களின் தாகம் தமிழ் ஈழத்தாயகம் என்ற நிலைப்பாட்டை முன்னிலைப்படுத்தி யுத்தத்தில் ஈடுபட்டார்கள். பல இயக்கங்கள் ஒரே நோக்கத்தோடு இயங்க ஆரம்பிக்கப்பட்டதாக காணப்படவில்லை. அவர்களுக்குள்ளும் ஒரு போட்டி பொறாமை சுயநலம் ஈகோ இருக்கவே செய்தன. எல்லோருமே யுத்தத்தில் தங்களது கெட்டித்தனத்தை காட்டவே முயன்றார்கள். சுகாதாரத்திற்கு ஒரு குழு கல்விக்கு ஒரு குழு இடம்பெயரந்தவர்களுக்கு எதவ ஒரு குழு முதலுதவிக்கு ஒரு அணி என அவர்கள் ஒவ்வொரு பணியை செய்ய முன்வரவில்லை. ஒரு கால கட்டத்தில் தங்களுக்குள் மோதிக் கொள்ளும் அளவுக்கு அரசு எதிர்ப்பு அணிகள் இயங்கின.

ஆயுதபோராட்டக்காலமும் இடையிடையே ஏற்படுத்தப்பட்ட அரசு புலிகளுடனான பேச்சுவார்த்தைகளும் தீர்வுக்கான ஈடுபாட்டினை கொண்டிருந்தன. குறிப்பாக ஆயுத போராட்ட ஆரம்பத்தில் இந்தியாவில் நடைபெற்ற திம்பு பேச்சுவார்த்தை முக்கியமாக கருதப்பட்டது. அதில் சில தமிழர்களுக்கு சார்பான கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இருந்தாலும் அவற்றை செயலுருவம் கொடுப்பதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாது அப்பேச்சுவார்த்தை அர்த்தமற்றதாகிவிட்டது. பின்னர் நெல்லியடியில் மில்லர் என்ற தற்கொலை போராளியால் வெடிக்க

வைக்கப்பட்ட முதல் மனிதக்குண்டு நிகழ்வும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி போரினால் அவதியுற்ற யாழ்ப்பாண மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் விமானம் மூலம் போடப்பட்ட நிகழ்வும் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வைத்தது. அதன் முடிவு மாகாணசபை திட்டத்தை ஒரு தீர்வாக செயலுருவாக்கினார்கள். பல இயக்கங்கள் இந்தத் தீர்வை ஏற்றுக்கொண்டிருந்து தமது போர் செயற்பாட்டை கைவிட்டிருந்தாலும் விடுதலைப்புலிகளும் ஈரோஸ் அமைப்பும் இத்தீர்வுக்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. மாகாணசபை வட-கிழக்கு என ஒரு அலகாக அமையப்பெற்று அதன் முதலமைச்சராக வரதராஜப்பெருமாள் தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும் இந்திய அமைதிப் படையுடனான விடுதலைப்புலிகளின் யுத்தம் தொடர்ந்தது. இந்தியப்படை இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட நேரத்தில் வடகிழக்கு மாகாணசபையை ஆண்டுகொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல். எப்.. ரெலோ அமைப்புகள் புலிகள் மீளெழ இந்தியப்படைகளோடு இந்தியாவுக்கு சென்றுவிட்டனர். அவ்வாறு வடகிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டபோது முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள் வடகிழக்கை தனிநாடாக பிரகடனப்படுத்திவிட்டு இந்தியாவுக்கு சென்றிருந்தார். அதன்பின் புலிகள் பிரேமதாசாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையும் வெற்றி பெறவில்லை.

**சந்திரிக்காவின் முன்மொழிவு**

அதேபோன்று பின்னர் சந்திரிக்கா பண்டாரநாயக்காவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் ஓரளவு பயனுடையதாக காணப்பட்டாலும் விடுதலைப்புலிகளின் அமைப்பு தங்களின் தாகம் தமிழ் ஈழத்தாயகம் என்ற நிலைப்பாடு காரணத்தால் பேச்சவார்த்தைகளை முடிவுறுத்த காரணமானது. சந்திரிக்கா 2000ம் ஆண்டு ஒரு அரசியல் அமைப்பு நகலை வெளியிட்டிருந்தார். அது ஒரு சமஷ்டி முறைமை அடிப்படையிலானதாக காணப்பட்டது. ஒற்றை ஆட்சி அரசு என்ற பதம் நீக்கப்பட்டு பிரதேசங்களின் ஒன்றியம் ( Union of Regions ) என மாற்றியிருந்தார். அதை அன்று எதிர் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து அந்நகலை கிழித்தெறிந்திருந்தாலும் புலிகளின் தலைமையும் அதனை ஏற்கவில்லை. சந்திரிக்காவுக்காக அத் திட்டத்தை தயாரித்த நீலன் திருச்செல்வம் தற்கொலை போராளி மூலம் கொலைசெய்யப்பட்டார். சந்திரிக்காவும் தற்கொலை குண்டுதாரியின் தாக்குதலிளிருந்து மயிரிலையில் தப்பினார்.

**ஒஸ்லோ பேச்சுவார்த்தை**

2002ம் ஆண்டு நோர்வேயின் அனுசரணையுடன் ஏற்பட்ட ரணில் விக்கிரமசிங்காவுடனான பேச்சுவார்த்தையின்போது அமைதி உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. கண்டி யாழ்ப்பாண A9 பாதை பொதுமக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டது. அதன்பின்னர் தாய்லாந்து ரோஸ் கார்டினிலும் (ROSE GARDEN) பின்னர் நோர்வே ஒஸ்லோவிலும் (OSLO) யப்பான் டோக்கியோவிலும் நடைபெற்ற பேச்சவார்த்தைகளின் போது அரசாங்க தரப்பில் ரணில்

விக்கிரமசிங்காவின் பிரதிநிதிகளாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ரவுவ் ஹக்கீம் மற்றும் ஆகியோர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார்கள். புலிகளின் சார்பில் அன்ரன் பாலசிங்கத்துடன் தமிழ்ச்செல்வனும் கருணா அம்மானும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டார்கள். ஒஸ்லோ தீர்மானத்தின்படி உள்ளக சுயநிர்ணய உரிமையுள்ள சமஸ்டி அடிப்படையிலான மாநில சுயாட்சி பற்றி ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு அரசுதரப்பில் இணக்கம் காணப்பட்டது. அதனை விடுதலைப் புலிகளும் இணக்கப்பட்டு ஆராயலாமென அன்ரன் பாலசிங்கம் அபிப்பிராயபட்டபோதும் அதை தமிழ்த்தாயகம் என்ற இறுக்கமான நிலைப்பாட்டினை கொண்டிருந்த புலிகளின் தலைவர் பிரபாகரன் நிராகரித்துவிட்டார். எனவே யுத்தகாலத்தில் யுத்தத்தை முடிவுறுத்தும் நோக்கமாக அரசாங்க தரப்பில் முன்வைக்கப்பட்ட பல அரிய சிறந்த தீர்வுகளை ஈழம் என்ற கற்பனை இராச்சியத்தில் முழுமையாக புலிகள் இயக்கம் மூழ்கியிருந்தமையினால் புலிகளின் தலைவர் பிரபாகரனால் கைநழுவி விடப்பட்டது எனக் கூறுவதில் எந்தப் பிழையும் இல்லை.. இவ்வாறாக தமிழ் தலைமைகளின் கற்பனை ஈழம் காரணமாக சந்திரிக்கா அம்மையார் 2000ம் ஆண்டு நீலன் திருச்செல்வத்தின் சட்டரீதியான அணுகுமுறை ஆலோசனைகளுடன் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பும் ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வும் தமிழர்களுக்கு கிடைக்காமல் போய்விட்டன.

இந்த நிலைமைகளை ஆராயும்போது சிங்களவர்கள் எந்தத் தீர்வையும் தமிழர்களுக்கு வழங்கமாட்டார்கள் என குறை கூறுவதில் எந்த நியாயமுமில்லை. தமிழ் தலைவர்கள் தங்கள் அசமந்தப் போக்கினாலும் யுத்த நிலைமைகளில் ஆணவப் போக்கினாலும் ஒரு தீர்வு உருவாவதற்கு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பங்களை பயன்படுத்தவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

ஆயுதத்தை நம்பியவர்கள் அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட காலத்தில் 2002ம் ஆண்டு தங்கள் வசமிருந்த காடுகளில் இராணுவ பயிற்சிகளை தீவிரமாக மேற்கொள்ளாது மக்களிடம் வரிகளை மட்டும் சேகரிப்பதில் முழுக் கவனத்தையும் வைத்திருந்து பஜூரோ ஜீப் வண்டிகளையும் பல்சார் மோட்டார் சைக்கிள்களையும் தருவித்து குடும்பத்தினருடன் சுற்றித்திரிய படையணித் தலைவர்களுக்கு சகாயம் வழங்கி அவர்களின் போரிடும் குணங்களை மழுங்கடித்த வரலாற்றுத் தவறை மறைக்க முடியாது. பின்னர் பயிற்சிபெற்றிராதிருந்த அப்பாவி இளைஞர் யுவதிகளை யுத்தத்தில் வலோத்காரமாக ஈடுபடுத்தி அவர்களை பலிகடாவாக்கியிருந்தார்கள்.

இந்தத் தவறை செய்யாது ஆயுதத்துடன் புலித் தலைமைகள் முழுமையாக ஈடுபட்டு பயிற்சி மேற்கொண்டிருந்தால் மாவிலாற்றுடன் போர் முடிவுற்றிருக்கும். சிறுபான்மையினரான தமிழருக்கு ஒரு சிறந்த தீர்வு எட்டியிருக்கும்.

கிடைக்கவிருந்த தீர்வுத்திட்டங்களை தமிழர் தரப்பு தலைமைகள் ஏற்கவில்லை.